**உஹன பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உஹன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உஹன புதிய சந்தை நிலப்பிரதேசத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,838,188 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 129,567 செலவிடப்பட்டு 2016 ஆம் ஆண்டின்போது சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கொனாகொல்ல வார இறுதிச் சந்தையின் மலசலகூடம் கட்டமைப்பு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடை வாடகை பதிவேட்டிற்கமைய சபைக்கு சொந்தமான உஹன மற்றும் வேருன்கெடகொட கடைகளின் வருடாந்த மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,004,578 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 989,978 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால், மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 14,600 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கடை வாடகை பதிவேட்டிற்கமைய மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கடை வாடகை நிலுவையானது ரூபா 313,381 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 298,781 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணத்தால், ஆண்டிற்காக வருமானம் ரூபா 14,600 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நிலையான வைப்புகளுக்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 168,735 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 124,776 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 43,959 இனால் வட்டி வருமானம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 242,012 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணங்கள் வருமானம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்புக்களாக

காண்பிக்கப்பட்டிருந்தமையால், பொறுப்புக்கள் அந்த பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 33,750 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபைக்கு சொந்தமான 04 வாகனங்களின் ரூபா 1,055,000 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிராததுடன், 08 வாகனங்கள் 2017 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கைக்கமைய பெறுமதி ரூபா 23,450,000 ஆன போதிலும், அது நிலையான சொத்துக்களில் ரூபா 33,277,143 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையான காரணத்தால் நிலையான சொத்துக்கள் ரூபா 9,827,143 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

தேவையான தகவல்களை முன்வைக்காமையால் ரூபா 7,654,088 தொகையான 06 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 150(4) ஆம் பிரிவு | 33,750 | அனுமதிப்பத்திரக் கட்டணங்களை செலுத்துதலை புறக்கணித்த சந்தர்ப்பங்களில் அந்த புறக்கணிப்புக்கள் தொடர்பில் சபையின் செயலாளரால் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டு, அந்த மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | (i) | பிரதேச சபை விதி 217 | 57,576,384 | சபைக்கு சொந்தமான மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் பீ.எஸ் 46 மாதிரிக்கமைய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | பிரதேச சபை விதி 180 | - | பிரதேச சபையின் வருமானத்தைச் சேகரித்தல், களஞ்சியக் கட்டுப்பாடு, காசோலை விநியோகித்தல் என்பவற்றுக்குரிய உத்தியோகத்தர்களினால் பிணைப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பிரதேச சபை விதி 59 - 66 | - | ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் பிரதேசத்தினுள் பரிசோதனைகள் மேற்கொண்டு தொழிற்சாலை வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணம் 1647(உ) | - | வாகனங்கள் தொடர்பில் தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 | - | சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | சபையினால் கணனி மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,024,652 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,045,620 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,069,876 | 1,044,785 | 1,043,573 | 3,414,214 | 1,069,876 | 1,044,785 | 1,058,929 | 3,375,198 |
| (ii) | வாடகை | 1,057,748 | 989,978 | 936,441 | 298,781 | 1,048,148 | 1,029,058 | 929,390 | 245,244 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 250,000 | 480,650 | 480,650 | - | 700,000 | 428,180 | 428,180 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,975,000 | 2,683,967 | 3,690,216 | 2,674,037 | 3,975,000 | 2,112,542 | 2,495,809 | 1,968,799 |
| | | 6,352,624 | 5,199,380 | 6,150,880 | 6,387,032 | 6,793,024 | 4,614,565 | 4,912,308 | 5,589,241 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியல் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 10,788,621 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் ரூபா 6,150,880 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டிற்குரிய ரூபா 4,637,741 அல்லது 43 சதவீதமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

2007 ஆம் ஆண்டின் போது வீதவரி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிடுதல் இடம்பெற்றிருந்தது. வீதவரி பதிவேட்டிற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வீதவரி ரூபா 3,414,214 ஆன போதிலும், நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

கடை வாடகை பதிவேட்டிற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியல் உள்ளபடியான நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 313,380 ஆக இருந்த போதிலும், நிலுவையை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வியாபார நிலையங்களின் 35 உரிமையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களாக ரூபா 33,750 தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரினதும் ஏனைய அதிகாரிகளினதும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 894,667 தொகை மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,779,370 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) கைவிடப்பட்ட பணிகள்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளினுள் 02 பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 3,152,188 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2018 யூலை 06 ஆந் திகதியளவில் அது கைவிடப்பட்டிருந்தது.

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

கூட்டெரு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதி மத்திய அதிகாரசபை மற்றும் உஹன பிரதேச சபை உடன்படிக்கையொன்று கைச்சாத்திட்டிருந்ததுடன், நிர்மாணங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொகையில் 20 சதவீதம் அதாவது ரூபா 1,789,907 தொகை 2015 ஒக்தோபர் மாதத்தின் போது சபைக்கு கிடைத்திருந்தது. உரிய செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீதம், அதாவது, ரூபா 1,314,000 தொகை முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு 2016 பெப்ரவரி மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. காணியின் உரித்து தீர்க்கப்படாமையால் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தொடர்ந்தும் தாமதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக குப்பைகளை சேகரிக்கும் டிரக்டர் நாளொன்றுக்கு 20 கிலோ மீட்டருக்கு அதிகமான ஓட்டத்தில் ஈடுபடுத்த நேர்ந்திருந்ததுடன், 2016 ஆம் ஆண்டு முதல் 2018 மே வரையிலும் ரூபா 284,000 தொகையினை அதற்காக செலுத்த நேர்ந்திருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பில் சபை அறிந்திருக்கவில்லை என்பதை அறிவித்துள்ளமையால் சபை அது தொடர்பில் மேற்கொண்ட ஆயத்தம் திருப்திகரமாக இருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் 2009 சனவரி மற்றும் 2013 யூன் மாதங்களில் வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த 02 கடைகளுக்குரிய ரூபா 4,327 தொகை முன் குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அந்த கடை அறைகளை மீள கையேற்கப்பட்டிருந்த போதிலும், உரிய நிலுவைபணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான ஆதனவரி சொத்துக்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், 2007 ஆம் ஆண்டின் போது இறுதியாக ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியின் 06 பதவிகளுக்காக 10 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் மற்றும் 02 பதவிகளுக்காக 02 உத்தியோகத்தர்களின் மிகையும் நிலவியது.

(ஆ) சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற 10 உத்தியோகத்தர்களினதும், ஓய்வூதியம் பெற்றுச்சென்ற ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 36,238 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்குட்படுத்தல்

காணி மற்றும் கட்டிட விடயங்கள் 07 மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களாக பதிவேட்டிற்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ளாமை

2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தொலைபேசிக் கோபுரத்திற்கு ரூபா 20,000 படி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையின் அதிகார எல்லையினுள் 12 தொலைபேசிக் கோபுரங்கள் காணப்பட்ட போதிலும், அதற்காக ரூபா 240,000 தொகையான ஆரம்ப கட்டணமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்படும் காணி மற்றும் கட்டிட விடயங்கள் 08 இற்குரிய 57 அலகுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்வேறு நிறுவனங்களிடமிருந்து சபைக்கு வழங்கிய 09 வாகனங்களின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

சபைக்குரிய வருடாந்த பெறுமதி ரூபா 42,000 தொகையான வேருன்கெட்டகொட கடைத்தொகுதி 09 ஆம் இலக்க அறையினை நிர்மாணிக்கப்பட்ட திகதி முதல் கணக்காய்வு திகதி (2018 யூலை 06) ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.4.5 வாகனப் பயன்பாடு

ஓட்ட நிலுவையிலுள்ள 25 வாகனங்களில் 02 வாகனங்களுக்காக மாத்திரம் வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்பீட்டு சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 23 வாகனங்கஞ்ககாக அந்தவாகனங்கள் சபைக்கு கிடைத்த திகதி 2018 ஆகஸ்ட் வரையிலும், அந்த சான்றிதழை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இற்கமைய சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், ரூபா 2,164,104 பெறுமதியான 05 பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுகள் 2018 மே 03 ஆந் திகதி அதாவது 33 நாட்கள் தாமதித்தே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 03 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

# 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானம் அறவிடப்படாமை.<br>ii. உப விதிகளை விதிக்கப்பட்டிராமை.<br>iii. வருமான மூலங்களை இனங்காணப்பட்டிராமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு உரிய முறையில் தயாரிக்கப்பட்டிராமை. |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | பொருட்களை களஞ்சியப்படுத்தல் உரிய முறையில் இடம்பெறாமை. |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்காமை |

| | | |
|---|---|---|
| (உ) | கணக்கீடு | சொத்துக்கள் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிராமை. |
| (ஊ) | ஒப்பந்த நிர்வாகம் | i. போதியவான மேற்பார்வை இல்லாதிருத்தல்.<br>ii. நிர்மாணங்களுக்கான கோவையொன்று பேணப்பட்டிராமை. |